අග්‍රාමාත්‍ය කාර්යාලය
பிரதம அமைச்சரின் அலுவலகம்
PRIME MINISTER'S OFFICE

58, ශ්‍රීමත් අර්නස්ට් ද සිල්වා මාවත, කොළඹ 07.
58, ஸ்ரீமத் ஏர்னஸ்ட் த சில்வா மாவத்தை, கொழும்பு 07.
58, Sir Ernest de Silva Mawatha, Colombo 07.

මගේ යොමුව / எனது குறியீடு / My Ref. எனது இலக்கம்:PTF/01/Gen/01 ඔබේ යොමුව / உமது குறியீடு / Your Ref.

දිනය / திகதி / Date 2020.05.04

**அனைத்து மாவட்டச் செயலாளர்கள் மற்றும்**
**அனைத்து பிரதேச செயலாளர்களுக்கும்**

**ஓய்வுபெற்றவர்களுக்கு மே மாத ஓய்வூதியத்தைச் செலுத்துதல்**

அனைத்து ஓய்வுபெற்ற அரச ஊழியர்களுக்கும் ஒவ்வொரு மாதமும் 10 ஆந் திகதி ஓய்வூதியத்தைச் செலுத்த வேண்டியிருப்பினும், இம்முறை வெசாக் போயா தினம் மற்றும் வார இறுதி விடுமுறை நாட்கள் காணப்படுவதால், 2020 மே மாதத்திற்கான ஓய்வூதியத்தினை மே 05 மற்றும் 06 ஆந் திகதிகளில் செலுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

02. அதற்கேற்ப ஓய்வுபெற்றவர்கள் கடந்த ஏப்ரல் மாத ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்வதற்கு அரசாங்கம் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தது போன்றே, மே மாதத்திலும் மாவட்டச் செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களின் வழிகாட்டலின் கீழ் ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

03. அஞ்சல் திணைக்களம் ஊடாக ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்ளும் ஓய்வுபெற்றவர்களின் ஓய்வூதியம், அவர்களுக்கு ஏப்ரல் மாதம் வழங்கப்பட்டது போன்று அஞ்சல் திணைக்களத்தினால் வீட்டுக்கே கொண்டு வந்து ஒப்படைக்கப்படும்.

04. வங்கிகள் மூலம் ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்ளும் ஓய்வுபெற்றவர்கள் தமது ஓய்வூதியத்தினை கிராம உத்தியோகத்தர்கள் உட்பட கிராமிய மட்டத்தில் கடமை புரியும் உத்தியோகத்தர்களின் ஏற்பாட்டில், முப்படையினர் மற்றும் இலங்கை போக்குவரத்து சபையுடன் ஒன்றிணைந்து, சுகாதாரப் பிரிவினரின் விதந்துரைகள் மற்றும் ஒழுங்குபடுத்தல்களுக்கு உட்பட்ட வகையில் வங்கிகளுக்குச் செல்வதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

05. மேலும், அனைத்து ஓய்வுபெற்றவர்களுக்கும் தேவையான மருந்துகளைப் பெற்றுக்கொள்வதற்காக மருந்தகங்களுக்குச் (பாமசி) செல்வதற்கும் மருத்துவ சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்ள அருகிலுள்ள ஆயுர்வேத மருத்துவ நிலையங்களுக்கு அழைத்துச் செல்வதற்கும் மேற்குறிப்பிட்டவாறு வசதிகளை வழங்க வேண்டும்.

நீங்கள் 2020 ஏப்ரல் மாதத்திற்கான கொடுப்பனவுச் செயற்பாட்டினை மிகவும் சிறப்பாக மேற்கொண்டமை அவதானிக்கப்பட்டுள்ளது. எனவே 2020 மே மாதத்திற்கான கொடுப்பனவுச் செயற்பாட்டினையும் அவ்வாறே மேற்கொள்வீர்கள் என எதிர்பார்க்கிறேன்.

**காமினீ எஸ். செனரத்**
பிரதம அமைச்சரின் செயலாளர்

பிரதிகள்:

1. ஜனாதிபதியின் செயலாளர்
2. அமைச்சரவையின் செயலாளர்
3. கணக்காய்வாளர் நாயகம்

} தேவையான நடவடிக்கைகளுக்காக

කාර්යාලය / அலுவலகம் / Gen. Office 2575317 2575318
ෆැක්ස් / பெக்ஸ் / Fax 2574143 2575454 2575310
විද්‍යුත් තැපෑල / ஈ மெயில் / E-mail secpm@pmoffice.gov.lk

4. செயலாளர் - அரசாங்க, நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சு
5. செயலாளர் - பாதுகாப்பு அமைச்சு
6. செயலாளர் - சுகாதார மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சு
7. முப்படைத் தளபதிகள்
8. பொலிஸ் மா அதிபர்
9. சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்
10. ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்
11. அஞ்சல் மா அதிபர்

— தேவையான நடவடிக்கைகளுக்காக

12. தலைவர், இலங்கை போக்குவரத்து சபை - மேற்குறிப்பிட்ட பணிகளுக்காக எரிபொருள் கொண்ட வாகனங்களை சாரதிகளுடன் முப்படையினருக்கு வழங்குவதற்காக

13. பொது முகாமையாளர் - மக்கள் வங்கி, இலங்கை வங்கி, தேசிய சேமிப்பு வங்கி
14. பிரதான நிறைவேற்று அதிகாரி – அனைத்து தனியார் வங்கிகள்

— தேவையான நடவடிக்கைகளுக்காக